ஆண்டறிக்கை | 2017

LAKDIWA ENGINEERING

லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட

தூரநோக்கு

இலங்கை வாழ் மக்களுக்கு மிகச் சிறந்த மற்றும்
கவர்ச்சிகரமான சேவைக்கான வசதிகளை வழங்குவதற்குப் பங்களிப்பு செய்தல்.

செயற்பணி

இலங்கை போக்குவரத்துச் சபை (இ.போ.ச.) மற்றும் தனியார் பேருந்து
உரிமையாளர்களுக்கு சொந்தமான பேருந்துகளை சலுகை
விலையிலும் உயர் தரத்திலும் பழுதுபார்த்து பயணிகள்
போக்குவரத்தில் இணைத்தல்.

வ/ப லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட் அலுவலகம்

சட்ட நிலைமை	- 2007 இன் 17 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனம் ஆக்கப்பட்டுள்ளது.
கூட்டிணைக்கப்பட்ட திகதி	- 2001 ஒக்டோபர் 01
கம்பனி பதிவு இலக்கம்	- **PV21948**
அலுவலக முகவரி	- வ/ப லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட் அலுவலகம் இலக்கம் 73, மினுவன்கொடை வீதி, ஏக்கல, ஜா எல.
தொலைபேசி இலக்கம்	- 0112236530 / 0112230458
மின்னஞ்சல் முகவரி	- lakdiwaengco@gmail.com

உள்ளடக்கம்

* அறிமுகம் 1
* நிறுவன நிர்வாகம் 2-3
* தலைவரின் மீளாய்வு 4
* நிறுவனத் தகவல்கள் 5
* குறிக்கோள்கள் 6
* மைல்கற்கள் 7
* செயலாற்றுகை 8
* கணக்காய்வுக் குழு அறிக்கை 8
* செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 9
* வருடாந்த கணக்கு 2017 10-26
* கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 27-28
* கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் கணக்காய்வு விசாரணைக்குரிய பதில்கள்.................... 29-30

அறிமுகம்

1957 இன் 48 ஆம் இலக்க மோட்டார் வாகனுப் போக்குவரத்து சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய அப்போதைய போக்குவரத்து அமைச்சராக இருந்த கௌரவ லெஸ்லி சைமன் குணவர்தன அவர்கள் 1970.11.20 ஆம் திகதி இலக்கம் 14933 கொண்ட வர்த்தமானி பத்திரிகையில் கட்டளை ஒன்றை வெளியிட்டதன் மூலம் ஓட்டோமொபைல் தனியார் (இலங்கை) லிமிடெட் எனும் பெயரில் இருந்த 24 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட காணியினை இலங்கை போக்குவரத்து சபையின் பயன்பாட்டிற்காக ஒப்படைத்து இந்த கம்பனியினை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது.

அதன் போது ஏக்கல மத்திய வேலைத் தளம் 1974.02.15 ஆம் திகதி அப்போதைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமராக இருந்த கௌரவ சினிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இருந்தே இந்த கம்பனி புதிய பேருந்து உடல் பாகம் பழுது பார்த்தல் போன்றே பழைய பேருந்துகளின் உடல் பாக பழுது பார்த்தல் அடிப்படை ரீதியில் மேற்கொள்ளப்பட்டது. இந்த வேலைத் தளம் இரு பிரிவுகளை கொண்டுள்ளதுடன், ஒரு வேலைத் தளம் மத்திய வேலைத்தளமாக செயற்பட்டதுடன், ஏக்கல வேலைத்தளம் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமானதாகும்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் கீழ் 1993.06.14 ஆம் திகதி இந்த இரு வேலைத் தளங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஏக்கல என்ஜினியரிங் நடவடிக்கைகள் தொடர்பான தனியார் கம்பனியாக தனியார் மயப்படுத்தப்பட்டது.

பின்னர் இந்த தனியார் கம்பனி சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 400 கிரேட் வோல் பேருந்து செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. அதற்கு அமைய 2001 ஆம் ஆண்டு தொடக்கம் போக்குவரத்து அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனமான தனியார் கம்பனியாக அது முகமைத்துவப்படுத்தப்பட்டது. மேலும் பொருளாதார மேம்பாட்டினை உருவாக்கும் நோக்கத்துடன் பயிற்றுவிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளை இணைத்துக்கொண்டு நாட்டிற்குத் தேவையான பேருந்து உடல்களை உருவாக்குவதற்கு இந்த கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒருங்கிணைந்த அறிக்கையிடலை நோக்கிச் செல்லும் முன்னேற்றகரமான பயணத்தின் போது, வரையறுக்கப்பட்ட லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடட் கம்பனியினால் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வெற்றிகரமான வருடத்திற்கான தனது ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதுடன் நிச்சயமற்ற

நிதி மற்றும் முகாமைத்துவ நிதி அல்லாத பயன்பாடு தொடர்பில் போதியளவான விசாரணைகளை மேற்கொள்ளல் செயற்பாடுகளது விடயப் பரப்பிற்கு உரித்து உடையதாகும். குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி தகவல்கள் 2017 [னவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான தீர்மானிக்கப்பட்ட காலப் பகுதிக்கு உரிய வரையறுக்கப்பட்ட லக்திவ என்ஜினியரிங் பிரைவேட் கம்பனியின் வருடாந்த அறிக்கையிடல் சுற்றை வினைத்திறனுடன் பேணிச் செல்லும் பொது விடயமாகும். இந்த அறிக்கையின் நடைமுறை நோக்கமானது எமது பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினருக்கு கம்பனியில் மூலோபாயத் திசை மற்றும் வெற்றிகரமான செயல்பாடுகள் தொடர்பில் சுருக்கமான மற்றும் நேரடியான தொடர்பினை பெற்று கொடுத்தல் ஆகும். 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்திற்கு இணங்கும் வகையில் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் கீழ் நிதித் தகவல்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையினைத் தயாரிப்பதற்கு சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் தலைமை ஏற்று உள்ளது. இந்த ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை அனைத்து போதியளவு விடயங்கள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி உள்ளதுடன் கம்பனியின் ஒன்றிணைந்த செயற்பாடு மற்றும் அதன் தாக்கங்கள் தொடர்பில் குறிக்கோளாக கொண்ட நோக்குகள் மட்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிறுவன நிர்வாகம்

வரையறுக்கப்பட்ட லக்திவ என்ஜினியரிங் கம்பனியின் பணிப்பாளர் சபை, கம்பனி நிர்வாகத்தை உயர் தரத்தில் அர்ப்பணிப்புடன் மற்றும் பொறுப்புடன் கவனமாகப் பேணிச் செல்கின்றது. வரையறுக்கப்பட்ட லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட்டினால் அதன் கம்பெனி நிர்வாக கொள்கைகள் மற்றும் பயன்பாடுகள் நவீன முறையில் திட்டமிடப்பட்டுள்ளது கம்பனியின் நீண்டகால பங்குதாரர்களின் பெறுமதியை உருவாக்குவதற்காக தமது தரப்பினருக்கு தமது பொறுப்புக்கள் தொடர்பில் கவனத்தை செலுத்தி உள்ளமை தொடர்பில் உறுதிப்படுத்துவதற்காக ஆகும்.

பங்குதாரர்கள், உண்மையான ஊழியர்கள், நீண்டகால வாடிக்கையாளர்கள், பிரதான வழங்குனர்கள் , விசுவாசமான வாடிக்கையாளர்கள் மற்றும் அதனை வினைத்திறனுடன் செயல்படுத்தும் ஏனைய தரப்பினர்களை நிர்வகித்தல் உள்ளிட்ட அதன் அனைத்து முக்கிய தரப்பினர்களது தேவைப்பாட்டினை கம்பனி இனம் கண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, கம்பனி சட்டத்தின் தேவைப்பாடுகளும் நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்பினுள் சமனாக கருதப்படுகின்றது. இந்தக் கூற்றின் மூலம் சபையினால் பின்பற்றப்படும் நிறுவன நிர்வாகக் கொள்கைகள், பயன்பாடு மற்றும் செயல்பாடு வரையில் உள்ளது. சபையின் பணிப்பாளர்கள் ஐந்து பேரைக் கொண்டுள்ளதுடன், அவர்களின் ஒருவர் நிறைவேற்றுப் பணிப்பாளராக உள்ளதுடன் ஏனைய நான்கு பேரும் நிறைவேற்று தரம் அல்லாத பணிப்பாளர்கள் ஆவர்.

வெற்றிகரமான வருடத்தினுள் சபையானது ஆகக் குறைந்தது நான்கு தடவைகள் கூடியுள்ளது. ஒவ்வொரு கூட்டத்திற்கு முன்னரும் கம்பனியின் செயலாற்றுகை, புதிய முதலீடுகள், மூலதன செயல் திட்டம் மற்றும் விசேட சபை அங்கீகாரம் தேவைப்படும் வேறு சிக்கல்கள் தொடர்பில் சபை பத்திரம் முன்கூட்டியே தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டு தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு நிகழ்ச்சி நிரல் உரிய அனைத்து முகாமைத்துவ தகவல்கள் மற்றும் பின்புலம் என்பவை பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும். கம்பனியின் ஏனைய பணிப்பாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் வெளித்தரப்பினர்களுடன் தொடர்ச்சியாக தொடர்புகளைப் பேணுதல், கொள்கை தொடர்பான காரணங்கள் தொடர்பில் தலைவர் பொறுப்புக் கூற வேண்டும். மொத்த வணிக, செயற்பாடு மற்றும் மூலோபாய அபிவிருத்திக்காக அவர் பொறுப்புக் கூற வேண்டும்.

தலைவரின் மீளாய்வு

2017 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை வெற்றிகரமாக வெளியிடுவதற்கான இதயபூர்வ வாழ்த்துக்கள் தொடர்பில் நேரடி செய்தி மற்றும் அடிப்படை கருத்தினை ஒன்றிணைக்க கிடைத்தமை நான் பெற்ற பாக்கியம் ஆகும். அமைச்சரது உற்பத்தி திறனான ஒத்துழைப்பை கவனத்துடன் கொண்டு அதன் மூலம் நிறுவனத்தின் பொருளாதார உற்பத்தித்திறன் மற்றும் தேவையான வருமானத்தினை படிப்படியாக அதிகரிப்பது எனது ஒரே எதிர்பார்ப்பாகும். பொதுவாக ஊழியர்கள் முகம் கொடுக்கும் சிக்கல்களை முடிந்த அளவு விரைவில் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக உள்ளதுடன் பொருளாதார உற்பத்தியில் மிதமான அதிகரிப்பின் மூலம் ஊக்குவிப்பை பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்கும் என்பதில் எனக்கு விசேட உணர்வொன்று உள்ளது. அது எமது இலங்கை போக்குவரத்து சபையின் கருத்தின் அடிப்படையில் முதன்மையாக உள்ளது.

அரசாங்கத்திற்கும் மற்றும் அதன் அமைச்சுக்களுக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களின் சிறு திருத்தல் வேலைகள் மற்றும் ஏனைய கட்டாய சேவைகள் எமது தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் எனது தூர நோக்கானது கவனமாக லக்திவவை ஒரு இலகு கம்பனியாக மாற்றுவதாகும்.போக்குவரத்து அமைச்சர், கௌரவ நிமல் சிரிபால டி சில்வா , பிரதி அமைச்சர் கௌரவ அசோக்க அபேசிங்க மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் உரிய உத்தியோகத்தர்களினால் எனக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதுடன் நிறைவேற்றுப் பணிப்பாளர் சபை மற்றும் அனுபவம் உள்ள முகாமைத்துவ குழுவிற்கு, நிர்மாணிக்கப்பட்ட கம்பனிக்கு அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் சந்தேகத்திற்கு இடமற்ற விசுவாசத்திற்காக நான் மனதார பாராட்டுகளை தெரிவிக்கின்றேன்.

எமது பெறுமதி மிக்க ஊழியர்களது நிலையான உறுதிப்பாட்டின் மூலம் தாபிக்கப்பட்ட கம்பனிக்கு அவர்கள் நீண்ட காலம் அர்ப்பணிப்புடன் உள்ளனர் என்பதை மீளவும் நிரூபித்துள்ளனர். எமது மதிப்பு மிக்க கொள்வனவாளார்களுக்கு, உத்தியோகபூர்வ வழங்குனர்களுக்கு மற்றும் வியாபார பங்காளர்களுக்கு அவர்களது மதிப்புமிக்க ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர விசுவாசத்திற்காக பணிவுடன் நன்றி தெரிவிப்பதற்கு நான் விரும்புகின்றேன். சந்தேகத்திற்கு இடமின்றி அதனை மேலும் பெற்றுக் கொள்வதற்கு நான் உடனடியாக ஏனைய அமைச்சு பிரதானிகளை சந்திப்பதற்கு எதிர்பார்க்கின்றேன்.

பீ.ஆர்.எல். குணவர்த்தன
தலைவர்,
லக்திவ எஞ்சினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்,
ஏக்கல, ஜா-எல

நிறுவனத் தகவல்

நிறுவனத்தின் பெயர் : லக்திவ என்ஜினியரிங் கம்பனி பிரைவேட் லிமிட்டட்

சட்டரீதியான உருவாக்கம் : 2007 இன் 17 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2001 ஒக்டோபர் 01

கம்பனியின் பதிவு இல. : PV21948

தலைமை/பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்: இல.73, மினுவாங்கொட வீதி, ஏக்கல, ஜா-எல

பணிப்பாளர் சபை :

திரு. பீ.ஆர்.எல். குணவர்த்தன – தலைவர்
திரு. கே.எஸ்.எம். டி சில்வா – பணிப்பாளர்
திரு. சரத் ஆபா – பணிப்பாளர்
திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜெயசிங்க – பணிப்பாளர்
திரு. ஜீ. அஜித் பிரியந்த – பணிப்பாளர்
திரு. ஹேமந்த ராஜபக்ஷ – கம்பனி செயலாளர்

பதவியணியினர் :

திரு. கே.எஸ். அனுரகுமார - பொறியியலாளர்
திரு. கயான் சந்திரசிறி - கணக்காளர்
திருமதி. ஜே. அமரதிவாகர - நிர்வாக உத்தியோகத்தர்
திரு. மஞ்சுள சம்பத் - கணக்கீட்டு உத்தியோகத்தர்
திரு. எல். விஜேரத்ன - வழங்கல் உத்தியோகத்தர்
திரு. சஜித் ரவீந்திர - தலைவரின் செயலாளர்

குறிக்கோள்கள்

- இ.போ.ச. பேரூந்துகளை பொதுமக்களுக்கு குறைந்த விலையிலும் உயர் தரத்திலும் வழங்குதல்.

- பொருளாதார அபிவிருத்திக்காக திறமையான முழுமையான வேலைப்படையொன்றை உருவாக்குதல்.

- வாகன பரிசோதனை செய்தல், ஓட்டுநர் மோட்டார் பொறிமு தொடர்பான பயிற்சி மற்றும் ஏனைய தொடர்புடைய துறைகளில் வணிகத்தை மேற்கொள்ளுவதற்கு முகாமைத்துவ ஆலோசகர்கள், கூட்டு முயற்சி முகவர்கள் மற்றும் பிரதிநிதிகளாக சேவைகளை வழங்குதல்.

- உற்பத்தி, பராமரிப்பு மற்றும் செயற்பாடு தொடர்பாக பயன்படுத்தக்கூடிய திறன் கொண்ட மோட்டர்களுக்காக வேறு பொருட்கள் மற்றும் அனைத்து பொருட்கள் மற்றும் சாதனங்கள் அல்லது திறன் கொண்ட இயந்திரங்கள், கூறு பாகங்கள், உதிரிப் பாகங்கள், மற்றும் பொருத்துக்கள் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், பொருத்துதல், வாடகைக்கு விடுதல், பழுதுபார்த்தல், மாற்றுதல் மற்றும் கொடுக்கல் வாங்கல் செய்தல்.

- வாகன திருத்துமிட உரிமையாளர்கள், வாடகை வண்டி, ஒம்னிபஸ், மோட்டார் கார், லொரி, மோட்டார் சைக்கிள் அல்லது ஏனைய அரச அல்லது தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள், தொழில் தலைவர்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள், வாகன திருத்துமிட நிர்மாணிப்பாளர்கள், அனைத்து வகையான மோட்டார் உதிரிப் பாகங்களின் விற்பனையாளர்கள், மோட்டார் மற்றும் இயந்திரவியல் பொறியியலாளர்கிளின் வியாபாரத்தை நடாத்திச் செல்லுவதற்கு, அனைத்து வகையான போக்குவரத்துக்களினதும் எண்ணெய் மற்றும் பெற்றோலியப் பொருட்களின் விற்பனையாளர்கள் மற்றும் அனைத்து விபரங்கள் கொண்ட வாகனங்களை வாடகைக்கு வழங்குபவர்களின் வணிகத்தை நடாத்திச் செல்லுதல்.

- எண்ணெய், மின்சாரம், நீராவி, எரிவாயு அல்லது வேறு எந்த வகையிலும் தானியங்கி சக்தியின் மூலம் முன்னேறும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட எந்த வகையான வாகனங்களையும் உற்பத்தி செய்தல், பொருத்துதல், இறக்குமதி செய்தல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல், பரிமாற்றம் செய்தல், மாற்றுதல் அல்லது மேம்படுத்துதல் மற்றும் கொடுக்கல் வாங்கல் செய்தல்.

- கம்பனியின் வணிகம் அல்லது செயற்பாடுகள் தொடர்பாக அல்லது பொதுவாக இதுபோன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களால் வழமையாக கையாளப்படுகின்ற அனைத்து வகையான பொறிகள், இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள், பாத்திரங்கள், பொருட்கள் என்பவற்றை உற்பத்தி செய்தல், பொருத்துதல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், பரிமாற்றம் செய்தல், மாற்றுதல், மேம்படுத்துதல், கையாளுதல், சந்தைக்கு தயார் செய்தல் மற்றும் வேறுவகையில் கொடுக்கல் வாங்கல் செய்தல்.

- பயணிகள் போக்குவரத்து வணிகத்தை பேணுதலும் மற்றும் செயற்படுத்துதலும் மற்றும் நாட்டின் எந்தப் பகுதியிலும் போக்குவரத்து வணிகத்தை நடாத்திச் செல்லுதல்.

மைல்கற்கள்

2017

முதல் முறை ஆண்டொன்றிற்கு 14 மில்லியன் இலாபத்தை ஈட்டுதல

2014

பழுதுபார்க்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

2001

வ/ப லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் தாபித்தல்.

1993

ஏக்கல பொறியியல் வேலைத்தளம் தனியார்மயமாக்கல்

1974

ஏக்கல மத்திய வேலைத்தளம் தொடங்கப்பட்டது.

செயலாற்றுகை

> வருமானம் (ரூபா. மில்லியன்)

ஆண்டு	2015	2016	2017
பழுதுபார்த்தல் வருமானம்	35	73	91

வருமானம் (ரூபா. மில்லியன்)



> திருத்தம் செய்யப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை

ஆண்டு	2015	2016	2017
திருத்தம் செய்யப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை	49	69	68

திருத்தம் செய்யப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை



> மொத்த சொத்துக்கள் (ரூபா. மிலலியன்)

ஆண்டு	2015	2016	2017
மொத்த சொத்துக்கள்	35	43	53

மொத்த சொத்துக்கள் (ரூபா. மிலலியன்)



> வரிக்குப் பின்னரான இலாபம் (ரூபா. மிலலியன்)

ஆண்டு	2015	2016	2017
வரிக்குப் பின்னரான இலாபம்	0	5.08	14.67

வரிக்குப் பின்னரான இலாபம் (ரூபா. மில்வியன்)



செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

- **நிதி அறிக்கையிடல்**

செயன்முறையின் நம்பகத்தன்மை மற்றும் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் நிலையான தன்மை மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடனான அதன் இணக்கப்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக முகாமைத்துவம் மற்றும் வெளியக கணக்காய்வாளர்களுடன அதன் வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது கம்பனியால் பின்பற்றப்பட்ட நிதி அறிக்கையிடல் முறைமை குழுவால் மீளாய்வு செய்து கலந்துரையாடப்பட்டது.

- **இடர்கள் மற்றும் கட்டுப்பாடுகள்**

குழுவினால் ஒவ்வொரு வணிகத் துறையிலும் எடுக்கப்பட்ட அல்லது கவனத்தில் கொள்ளப்பட்ட முக்கிய வணிக இடர்கள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை பெற்று மீளாய்வு செய்தது. குறிப்பாக கம்பனி, தொழிலாளர் பிரச்சனைகள், சம்பள அதிகரிப்பு போன்றவற்றால் கம்பனிக்கு ஏற்படும் நிதி தாக்கங்கள் குறித்து குழு ஆலோசித்து, சபையை தகுந்ததாக மதிப்பீடு செய்தது.

- **உள்ளகக் கணக்காய்வு**

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரால் கம்பனியின் உள்ளக கணக்காய்வு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. குழுவினால் உள்ளகக் கணக்காய்வாளர்களின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் அவர்களின் பரிந்துரைகளை முகாமைத்துவ பதில்களுடன் மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டு சூழலை மேம்படுத்தும் வகையில் அந்த பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான முன்னேற்றம் தொடர்ந்து தொடர் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது.

- **வெளியக கணக்காய்வு**

கம்பனியின் விடயப் பரப்பு மற்றும் கணக்காய்வு உத்தி மற்றும் கம்பனியின் சுமூகமான செயற்பாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இடர் காரணிகள் குறித்து கலந்துரையாடுவதற்காக கணக்கீட்டுகட குழு வெளியக கணக்காய்வாளர்களைச் சந்தித்தது.

- **முடிவுரை**

கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகள், செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயன்முறைகள் என்பன மூலம் கம்பனியின் செயற்பாடுகள் குறிப்பிடப்பட்ட கொள்கைகளுக்கு இணங்க முகாமை செய்யப்படுகின்றன என்பதற்கு நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதுடன் கம்பனியின் சொத்துக்கள் போதுமானளவு பாதுகாக்கப்படுகின்றன என்பதற்கும் நியாயமான உத்தரவாதத்தை வழங்குகின்றன என்பது தொடர்பில் கணக்காய்வுக் குழுவானது திருப்தியடைகின்றது.

ஒப்பம்
திரு. கே.எஸ்.எம்.டி சில்வா,
தலைவர்,
கணக்காய்வுக் குழு
31-12-2017

வருடாந்த கணக்கு 2017

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்புக்கள்	31.12.2017 ரூபா	31.12.2016 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	4.1	13,727,938	13,175,435
கற்பனை சொத்துக்கள்	4.2	234,000	260,000
		13,961,938	13,435,435
நடைமுறை சொத்துக்கள்			
இருப்புக்கள்	5	17,565,649	15,493,432
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்	6	15,182,219	10,486,133
வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்	7	735,776	728,076
நிலையான வைப்பு		2,000,000	2,885,199
காசு மற்றும் காசுக்கு சமமானவை	8	4,010,490	50,095
		39,494,135	29,642,935
மொத்த சொத்துக்கள்		**53,456,073**	**43,078,370**
உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்			
உரிமை மூலதனம்			
கூறப்பட்ட மூலதனம்		20	20
மூலதன ஒதுக்கம்		33,293,621	33,293,621
திரண்ட ஒதுக்கம்		(904,899)	(15,582,459)
மானியம்		-	
		32,388,742	17,711,182
நடைமுறையல்லா பொறுப்பு			
ஓய்வூதிய நலன் கடப்பாடு - பணிக்கொடை	9	16,092,226	18,109,704
நடைமுறை பொறுப்புக்கள்			
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்	10	4,975,106	3,667,200
வங்கி மேலதிகப்பற்று		-	3,590,284
		4,975,106	7,257,484
மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்		**53,456,073**	**43,078,370**

01 முதல் 21 வரையிலான கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வழங்குவதற்கு இயக்குநர்கள் குழு பொறுப்பாகும். இந்த நிதிநிலை அறிக்கைகள் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டது.

தலைவர்
CHAIRMAN
GOVERNMENT OWNED
...ADIYA ENGINEERING CO (PVT) LTD
EKALA, JA-ELA

இயக்குநர்
Director
LAKDIWA ENGINEERING COMPANY (PVT) LTD
No. 73, Minuwangoda R...
Ekala, Jaela

கணக்காளர்
Accountant
Government owned
LAKDIWA ENGINEERING COMPANY (PVT) LTD

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **விரிவான வருமானக் கூற்று**

	குறிப்புக்கள்	2017 ரூபா	2016 ரூபா
வருமானம்	11	90,728,459	73,340,474
விற்பனை கிரயம்	12	(77,400,083)	(64,569,598)
மொத்தலாபம்		13,328,376	8,770,876
ஏனைய வருமானம்	13	29,023,535	24,512,359
		42,351,911	33,283,235
நிர்வாக செலவினங்கள்	14	(26,907,115)	(27,474,024)
விநியோக கிரயங்கள்	15	(692,056)	(672,127)
நிதி கிரயங்கள்	16	(75,180)	(51,218)
வரிவிதிப்பிற்கு முன்னரான இலாபம்		**14,677,560**	**5,085,866**
வரி		(-)	(-)
வரி விதிப்பிற்குப் பின்னரான இலாபம்		**14,677,560**	**5,085,866**
ஏனைய விரிவான வருமானம்		-	-
காலப்பகுதிக்கான மொத்த விரிவான வருமானம்		**14,677,560**	**5,085,866**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று**

	கூறப்பட்ட மூலதனம் ரூபா	மூலதன ஒதுக்கம் ரூபா	திரண்ட ஒதுக்கம் ரூபா.	மொத்தம் ரூபா
2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	20	33,293,621	(20,668,325)	12,625,316
ஆண்டிற்கான இலாபம்	-	-	5,085,866	5,085,866
2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	20	33,293,621	(15,582,459)	17,711,182
ஆண்டிற்கான இலாபம்			14,677,560	14,677,560
2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	**20**	**33,293,621**	**(904,899)**	**32,388,742**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

காசுப்பாய்ச்சல் கூற்று

	2017 ரூபா	2016 ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்		
வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)	14,677,560	5,085,866
சீராக்கங்கள்:		
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு	648,249	-
காலக்கழிவு	26,000	-
பணிக்கொடை	1,676,724	16,736,021
வட்டி வருமானம்	(423,238)	-
தொழிற்படு மூலதன மாற்றங்களிற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்).	16,605,295	21,821,887
தொழிற்படு மூலதன சீராக்கங்கள்:		
இருப்புகளில் ஏற்பட்ட குறைவு	(2,072,217)	779,270
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளில் (அதிகரிப்பு) / குறைவு	(4,696,086)	(5,581,938)
வைப்புக்கள் மற்றும் முற்பணங்களில் குறைவு/(அதிகரிப்பு)	(7,700)	1,628,300
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு / (குறைவு)	1,307,906	(13,917,929)
	(5,468,097)	(17,092,297)
செயற்பாடுகளில் இருந்து உருவாக்கப்பட்ட காசு	11,137,198	4,729,589
செலுத்தப்பட்ட பணிக்கொடை	(3,694,202)	(992,210)
செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாகிய / (பயன்படுத்தப்படும்) தேறிய காசு	**7,442,996**	**3,737,379**
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்		
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(1,200,752)	(5,145,012)
நிலையான வைப்புகளில் முதலீடு	885,199	(46,168)
பெறப்பட்ட வட்டி	423,238	-
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு	**107,685**	**(5,191,180)**
காசு மற்றும் காசிற்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு / (குறைவு).	7,550,679	(1,453,800)
ஆண்டின் ஆரம்பத்த்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவை	(3,540,189)	(2,086,389)
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்கு சமமானவை	**4,010,490**	**(3,540,189)**
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் பகுப்பாய்வு		
கையிலுள்ள காசு	4,010,490	50,095
வங்கி மேலதிகப்பற்று	-	(3,590,284)
	4,010,490	**(3,540,189)**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான விளக்கக் குறிப்புக்கள்

1. பொதுவான தகவல்

அமைப்பு மற்றும் சட்ட ரீதியான கட்டமைப்பு

வரையறுக்கப்பட்ட லக்திவ எஞ்சினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டானது இலங்கையினுள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 73, மினுவாங்கொட வீதி, ஏக்கல, ஜா-எல எனும் இடத்தில் அமைந்துள்ளதுடன் பிரதான வர்த்தக இடமும் அதே இடத்தில் அமைந்துள்ளது. கம்பனி 2011 ஓகஸ்ட் 15 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது.

முதன்மை செயற்பாடு மற்றும் செயற்பாட்டின் தன்மை

கம்பனியானது இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளை பழுதுபார்க்கும் தொழிலை மேற்கொண்டு வருகிறது.

ஊழியர்களின் எண்ணிக்கை

2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் கம்பனியின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 103 ஆக காணப்பட்டது. (2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் அது 89 ஆக காணப்பட்டது)

நிதிக்கூற்றுக்களின் அங்கீகாரம்

இநத் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 03 ஆம் திகதி பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடுவதற்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2. தயாரிப்பின் அடிப்படை

இணக்கக் கூற்று

நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கம்பனியின் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பன இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (SLFRSs) இணங்கவும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளிற்கு இணங்கவும் முறையாக தயாரிக்கப்பட்டுள்ளன.

அளவீட்டின் அடிப்படை

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் வரலாற்று கிரய முறையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்களை பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

ஒப்பீட்டு தகவல்கள்

நடப்பாண்டில் சமர்ப்பிப்பிற்கு ஏதுவான வகையில் தேவையான போதெல்லாம் முன்னைய ஆண்டு புள்ளிவிபரங்கள் மற்றும் முக்கிய தகவல்கள் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன.

செயற்பாட்டு மற்றும் காட்சிப்படுத்தல் நாணயம்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட உருப்படிகள், கம்பனி தெரிந்தே செயற்படுகின்ற முதன்மைப் பொருளாதாரச் சூழலின் உத்தியோகபூர்வ நாணயத்தைப் பயன்படுத்தி சரியாக அளவிடப்பட்டு கிட்டிய ரூபாய் பெறுமதிக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் (ரூபா.) முறையாக சமர்ப்பிக்கப்படுகின்றன, இது கம்பனியின் செயற்பாட்டு மற்றும் காட்சிப்படுத்தல் நாணயமாகும்.

மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களின் பயன்பாடு

இலங்கை நிதி அறிக்கையிடல் நியங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை போதுமான அளவில் தயாரிப்பதற்காக போதியளவு கணக்கீட்டுப் பொருளாதார கொள்கைகளை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதற்கு மற்றும் அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றினைப் பாதிக்கும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் முக்கிய எடுகோள்களை பயன்னடுத்துவதற்கு முகாமைத்துவத்திற்கு நேரிடும். மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை எடுகோள்கள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடு திருத்தப்பட்ட காலப்பகுதியிலும் மற்றும் பாதிக்கப்படும் எந்தவொரு எதிர்கால காலங்களிலும் இனங்காணப்படுகின்றன.

பொருண்மை தன்மை மற்றும் திரட்சித் தன்மை

அனைத்து சமமான பொருண்மை உருப்படி வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காட்டப்படுகின்றன. சமனற்ற தன்மை கொண்ட உருப்படிகள் அல்லது செயற்பாடுகள் பொருண்மையற்றவையாகக் கருதப்படுமானால் மட்டும் அவை தனித்தனியாகக் காட்டப்படும்.

3. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட ந இணங்க தயாரிக்கப்படுகின்றன. இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முதன்மை கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கைகள் வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால் வழங்கப்பட்ட அனைத்து ஆண்டுகளுக்கும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் / நாணய மாற்று

வெளிநாட்டு நாணயங்களில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள், அந்த கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் அறிக்கையிடப்படும் தினத்தில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படும். நிதிக் கூற்றுக்கள் வெளியிடப்படும் தினத்தில் வெளிநாட்டு நாணயங்களில் பெயரிடப்பட்டுள்ள நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அந்த தினத்தில் நாணயமாற்று வீத தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படும். அந்நிய செலாவணி அடிப்படையில் எழும் வெளிநாட்டு நாணய மாற்று வித்தியாசம் இலாபம் அல்லது நட்டத்தினுள் இனம் காணப்படும். வரலாற்றுக் கிரயத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்படும் நிதி அல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கொடுக்கல் வாங்கல் இடம் பெற்ற தினத்தில் காணப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படும்.

சொத்துக்கள் மற்றும் மதிப்பீட்டின் அடிப்படைகள்

நிதி நிலைமை பற்றிய கூற்றில் நடைமுறை சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்களானது, கம்பனியின் வணிகத்தின் இயல்பான செயற்பாட்டு சுழற்சியின் போது அல்லது அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மிகக் குறுகிய காலத்தில் காசாக மாற்றக்கூடிய சொத்துக்கள் ஆகும். நடைமுறை சொத்துக்களைத் தவிர ஏனைய சொத்துக்களாவன நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு அப்பால் கம்பனி வைத்திருக்க விரும்புபவை ஆகும்.

நிதி நிதி அல்லாத சொத்துக்களின் இழப்பீடு

அனைத்து அறிக்கையிடல் திகதியிலும், அந்த சொத்துக்களில் இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்பதற்கு ஏதேனும் அறிகுறிகள் உள்ளனவா என்பதை தீர்மானிப்பதற்காக நிதி அல்லாத சொத்துக்கள் மீளாய்வு செய்யப்படும். இழப்பீடு ஏற்படக்கூடும் என்பதற்கு ஏதேனும் அறிகுறி இருக்குமானால், தாக்கத்திற்கு உள்ளான ஏதேனும் சொத்தில் (அல்லது குறித்த சொத்து தொகுதியில்) அறவ-ிடப்படக் கூடிய தொகையினை மதிப்பீடு செய்து அதன் கொள்ளளவு பெறுமதியுடன் ஒப்பீடு செய்யப்படும். மதிப்பீடு செய்யப்பட்ட அறவிடப்படக் கூடிய தொகை குறைவாக இருக்குமாயின், கொள்ளளவு பெறுமதி அதன் மதிப்பீடு செய்யப்பட்ட அறவிடப்படக் கூடிய பெறுமதி வரையிலும் குறைக்கப்படுவதுடன், இலாபம் அல்லது நட்டத்தினுள் இழப்பீட்டின் நட்டம் உடனடியாக இனம் காணப்படும்.

அதே போன்று, அனைத்து அறிக்கையிடல் திகதியிலும், ஒவ்வொரு இருப்பு உருப்படியிலும் (அல்லது ஒரே மாதிரியான உருப்படி தொகுதி) கொள்ளளவு பெறுமதி அதன் விற்பனை விலை கிரயத்தில் இருந்து குறைக்கப்பட்டு இழப்பீட்டிற்காக மதிப்பீட்டை பூரணப்படுத்துவதற்காக விற்பனையுடன் ஒப்பீடு செய்யப்படும். ஏதேனும் இருப்பு உருப்படியொன்று (அல்லது அதற்கு சமமான உருப்படி தொகுதியொன்று) இழப்பீடு ஏற்பட்டிருக்குமாயின், அதன் கொள்ளளவு பெறுமதி விற்பனை விலை கிரயம் வரையில் குறைக்கப்பட்டு பூரணப்படுத்துவதற்காக விற்பனை செய்ய நேரிடுவதுடன், இலாபம் அல்லது நட்டத்தினுள் இழப்பீட்டு நட்டம் உடனடியாக இனம் காணப்படும்.

இழப்பீட்டு நட்டம் மீளக் கிடைக்குமாயின், பெறுமதியான சொத்து (அல்லது குறித்த சொத்துக்களின் உள்நாட்டு தொகுதி) அதில் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடிய தொகையின் திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு அதிகரிக்கப்படும். (திருப்தியடையக் கூடிய வகையில் முழுமைப்படுத்துவதற்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்தல் மற்றும் விரிவான பொருள் இருப்பு அரிய சந்தர்ப்பங்களில் விரைவாக விற்பனை செய்தல்). எனினும் முன்னைய ஆண்டில் பெறுமதியான சொத்துக்களுக்கு (சார்ந்த சொத்துக்களின் உள்நாட்டுத் தொகுதி) எதுவித இழப்பு நட்டம் உடனடியாக இனம் காணப்பட்டிருக்காவிட்டால், இயல்பாக சரியாக தீர்மானிக்கக்கூடிய கருத்தில் கொள்ளப்பட வேண்டிய அளவை விட அதிகமில்லை. கருத்தில் கொள்ளப்பட வேண்டிய இலாபம் அல்லது பொருளாதார நட்டத்தினுள் இழப்பீட்டு நட்டத்தின் முக்கிய மீளத் திரும்பல் உடனடியாக இனம் காணப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆவணச் சான்றுகள் கிடைக்காததன் காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 8,290,423 தொகையான மீதியை சரிபார்க்க முடியாதிருந்தது.

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான விளக்கக் குறிப்புக்கள்

நிதிக் கருவிகள்

நிதிச் சொத்துக்கள்

வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்

வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் அடிப்படையில் இனம் காணப்படுவது கொடுக்கல் வாங்கல் விலையில் ஆகும். வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் அடிப்படையில் இனம் காணப்படுவது கொடுக்கல் வாங்கல் விலையில் ஆகும். பெரும்பாலான விற்பனைகள் இடம் பெறுவது பொதுவான கடன் நிபந்தனைகளின் அடிப்படையிலாக உள்ளதுடன் பெறவேண்டியவைகளுக்காக வட்டி பெற்றுக் கொள்ளப்படாததுடன் பெறவேண்டிய தொகை கழிவு செய்யப்படாத அளவில் பெறுமதியிடப்படும். பொதுவான கடன் நிபந்தனைகளின் அப்பால் கடன் நீடிக்கப்படும் போது, பெறப்பட வேண்டிய தொகை பலன் தரும் வட்டி முறைமையைப் பயன்படுத்தி மாற்றி அமைக்கப்பட்ட செலவின் அடிப்படையில் அளவீடு செய்யப்படும். ஒவ்வொரு அறிக்கையிடல் காலப் பகுதியின் இறுதியிலும், பணத்தினை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதற்கு ஏதேனும் புறநிலை சாட்சிகள் இருக்குமா என்பதனைத் தீர்மானிப்பதற்காக வியாபாரம் பெற வேண்டியவைகளின் கொள்ளளவு பெறுமதி மீளாய்வு செய்யப்படும். அவ்வாறாயின், இழப்பீட்டு நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தினுள் உடனடியாக இனம் காணப்படும்.

நிதி சொத்துக்களின் இழப்பீடு

ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படாத நிதிச் சொத்துக்களின் அளவில் இழப்பீடு தொடர்பான புறநிலை ஆதாரம் உள்ளதா என்பதனைத் தீர்மானிப்பதற்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. அவ்வாறாயின், இலாபம் அல்லது நட்டத்தினுள் இழப்பீட்டு நட்டம் உடனடியாக இனம் காணப்பட்டு அதற்கு அமைய நிதிச் சொத்துக்களின் கொள்ளளவு பெறுமதி குறைக்கப்படும்.

காசு மற்றும் காசிற்கு சமமானவை

காசு மற்றும் காசிற்கு சமமானவையில் கையிலுள்ள காசு, கேள்வி வைப்புக்கள் மற்றும் மூன்று மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான அசல் முதிர்வுகளுடன் கூடிய ஏனைய குறுங்கால அதிக திரவத்தன்மையுடைய முதலீடுகள் ஆகியவை உள்ளடங்குகின்றன. வங்கி மேலதிகப்பற்றுக்கள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

காசுப்பாய்ச்சல் கூற்று ”நேரில் முறையை” பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

நிதிப் பொறுப்புக்கள

வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்

வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் விலையில் (கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் உள்ளடங்கலாக) இனங்காணப்படுகின்றன.

வியாபார செலுத்த வேண்டியவை சாதாரண கடன் விதிமுறைகளின் அடிப்படையில் கடப்பாடுடையவையாக உள்ளதுடன் வட்டியை ஏற்கப்படுவதில்லை. வட்டியை ஏற்றுக் கொள்ளும் பொறுப்புக்கள் பின்னர் பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி மாற்றப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

வங்கி மேலதிகப் பற்றுக்கள்

வங்கி மேலதிகப்பற்றுக்கள் கோரிக்கைக்கேற்ப முழுமையாக திருப்பிச் செலுத்தப்படக்கூடியதும் மற்றும் ஆரம்பத்தில் அளவிடப்படுவதுடன் பின்னர் முகப்பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன.

பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களானது, கோரிக்கையின் பேரில் செலுத்துவதற்கு அல்லது அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புக்களாகும். நடைமுறையல்லாத பொறுப்புக்களானது அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தப்பட வேண்டிய மீதிகளாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அறியப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக கம்பனிக்கு சட்டப்பூர்வமான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடொன்று உள்ள போது ஏற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அந்தப் பொறுப்பைத் தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களின் வெளிப்பாய்ச்சலொன்று தேவையாக உள்ளது.

ஓய்வூதிய நலன் கிரயங்கள்

கம்பனிக்கு தீர்மானமான நலன்கள் மற்றும் வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டம் எனும் இரண்டும் உள்ளது. வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டம் என்பது கம்பனியினால் வேறு நிறுவனத்திற்கு நிலையான அங்கத்துவ பணம் செலுத்தும் ஓய்வூதிய திட்டமாக உள்ளதுடன் அனைத்து ஊழியர்களுக்கு செலுத்துவதற்கு போதிய அளவு சொத்துக்கள் நிதியத்திடம் இல்லையாயின் என் தற்போதைய மற்றும் முன்னைய கால பகுதிகளில் ஊழியர்களது சேவையில் மேலதிக பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகள் இல்லை. தீர்மானமான நலன் திட்டம் என்பது நிச்சயமான பங்களிப்பு திட்டம் ஒன்று இல்லாத ஓய்வூதிய திட்டம் ஆகும். பொதுவாக நிச்சயமான நலன் திட்ட ஊழியர் ஒருவர் ஓய்வூதியம் பெறும் போது கிடைக்கும் ஓய்வூதிய நலன் அளவானது பொதுவாக வயது, சேவை காலம் மற்றும் நட்ட ஈடு போன்ற காரணிகளில் ஒன்று அல்லது பலவற்றின் அடிப்படையில் தங்கி உள்ளது.

(அ) வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே. நி.) மற்றும் - ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (ஊ.ந.பொ.நி.)

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றின் அங்கத்துவ தொகைக்கு தகுதி பெறும் அனைத்து ஊழியர்களும் குறித்த சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க உரிய பங்களிப்புத் தொகைகளில் பாதுகாக்கப்படுவர்.

(ஆ) வரையறை செய்யப்பட்ட நலன்கள் திட்டம் - ஓய்வூதிய நலன் பொறுப்பு

ஊழியரது சேவையின் முதலாவது வருடம் தொடக்கம் ஓய்வூதிய நலன் கடப்பாடிற்கு கணக்குகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் பிற்போடப்பட்ட பொறுப்புகளின் கீழ் இந்த உருப்படி குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்திற்கு அமைய, ஊழியருக்கு பொறுப்பு எழுவது ஐந்து வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் மட்டுமே ஆகும். பணிக்கொடைக்காக வெளியாகத்தில் இருந்து நிதி வழங்கப்படுவது இல்லை.

நிகழத்தக்கவைகள் மற்றும் மூலதன கடப்பாடுகள்

அறிக்கையிடல் திகதியில் இருக்கும் அனைத்து பொருண்மையான மூலதன கடப்பாடுகள் மற்றும் நிகழத்தக்கவைகள் நிதிக்கூற்றுக்களிற்கான அந்தந்த குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

விரிவான வருமானக் கூற்று

வருமானத்தை இனம் காணுதல்

கம்பனிக்கு பொருளாதார பெறுபேறு பாய்தல் நிகழும் அளவிற்கு வருமானம் இனம் காணப்பட்டுள்ளதுடன், வருமானம் மற்றும் அது தொடர்பான கிரயம் அல்லது ஏற்க நேரிடும் என நம்பகமாக அளவிட முடியும். கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய கருத்தில் கொள்ளும் நியாயமான பெறுமதியில் வருமானம் அளவீடு செய்யப்படும்.

(அ) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளைப் பழுதுபார்ப்பதன் மூலம் கிடைக்கும் வருமானம், சேவைகளை நிறைவு செய்ததன் அடிப்படையில் சேவைகள் வழங்கப்படுகின்ற காலப்பகுதியில் இனங்காணப்பட்டு வழங்கப்பட்ட உண்மையாக மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது.

(ஆ)பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி வட்டி வருமானம் இனங்காணப்படுகிறது.

செலவினத்தை இனங்காணுதல்

வணிகத்தை வெற்றிகரமாக நடாத்துவதற்கும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை செயற்திறனுள்ள நிலையில் பராமரிக்கும் போது ஏற்படும் அனைத்து செலவினங்களும் ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டத்தை பெற்றுக் கொள்வதில் வருமானத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிதிக் கிரயங்கள்

நேரடி கடன் பெறுதல் தொடர்பாக ஏற்படும் அனைத்து வட்டி மற்றும் ஏனைய கிரயங்கள் நிதிக் கிரயங்களின் ஒரு பகுதியாக செலவிடப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

4.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

	பொறி மற்றும் உபகரணம் ரூபா	கணனி மற்றும் உபகரணம் ரூபா	மோட்டார் வாகனம் ரூபா	தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் ரூபா	மொத்தம் ரூபா
முன்கொண்டுவரப்பட்ட மீதி					8,290,423
2017 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி	3,027,870	275,860	63,272	1,518,010	4,885,012
காலப்பகுதியின் போதான சேர்த்தல்கள்	864,352	112,500	125,000	98,900	1,200,752
2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	3,892,222	388,360	188,272	1,616,910	14,376,187
திரண்ட பெறுமானத்தேய்வு					
2017 ஜனவரி 1 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு					-
ஆண்டுக்கான ஒதுக்கீடு	370,668	100,934	24,846	151,801	648,249
2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு	370,668	100,934	24,846	151,801	648,249
2017 சனவரி 1 இல் உள்ளவாறானது	3,027,870	275,860	63,272	1,518,010	13,175,435
2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது	3,521,554	287,426	163,426	1,465,109	13,727,938

4.2 கற்பனை சொத்துக்கள்

கணனி மென்பொருள்

<u>கிரயங்கள்</u>	
2017 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி	260,000
காலப்பகுதியின் போதான சேர்த்தல்கள்	-
2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	260,000
<u>காலக்கழிவு</u>	
திரண்ட காலக்கழிவு	-
2017 ஜனவரி 01 இல் உள்ளவாறான திரண்ட காலக்கழிவு	26,000
காலப்பகுதிக்கான ஒதுக்கீடு	26,000
2017 சனவரி 1 இல் உள்ளவாறான மீதி	260,000
2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்கொண்டுசெல்லும் தொகை	234,000

	குறிப் புக்கள்	31.12.2017 ரூபா	31.12.2016 ரூபா
5 இருப்புக்கள்			
முடிவுறா வேலை		12,368,791	5,336,112
உதிரிப் பாகங்கள்		5,196,859	10,157,320
		17,565,649	15,493,432
6 வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்			
வியாபார கடன்பட்டோர்		13,610,450	10,486,133
வட்டி		1,308,437	-
பெறவேண்டிய பணிக்கொடை – இ.போ.ச		263,332	-
		15,182,219	10,486,133
7 வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்			
முற்பணங்கள்	7.1	735,776	728,076
		735,776	728,076
7.1 முற்பணங்கள்			
விழா முற்பணங்கள்		735,776	725,076
சம்பள நிலுவைகளுக்கான முற்பணம் (பணிபுரியும் ஊழியர்கள்)		-	3,000
	7	735,776	728,076
8 காசு மற்றும் காசிற்கு சமமானவை			
இலங்கை வங்கி		3,960,236	-
சிறுசெலவு காசு		50,254	50,095
தண்டப்பண நிதிய மீதி		-	-
		4,010,490	50,095
கூறப்பட்ட மூலதனம்			
வழங்கப்பட்டு முழுமையாக செலுத்தப்பட்டது 2 சாதாரண பங்குகள		20	20
9 ஓய்வூதிய நலன் கடப்பாடு - பணிக்கொடை			
ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்பாடு		18,109,704	2,365,893
ஆண்டுக்கான ஏற்பாடு /(ஒதுக்கம்)		1,676,724	16,736,021
		19,786,428	19,101,914
ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்		(3,694,202)	(992,210)
ஆண்டின் இறுதியில் ஏற்பாடு		16,092,226	18,109,704

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

	குறிப்புக்கள்	31.12.2017 ரூபா	31.12.2016 ரூபா
10 வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்			
வியாபார கடன் கொடுத்தோர்		1,278,591.58	-
அட்டுறு செலவினங்கள் மற்றும் ஏனையவை	10.1	3,696,514	3,667,200
		4,975,106	3,667,200

10.1 அட்டுறு செலவினங்கள் மற்றும் ஏனையவைகள்

		31.12.2017 ரூபா	31.12.2016 ரூபா
சம்பளம் மற்றும் கூலிகள்		1,277,410	1,348,061
ஊக்குவிப்பு படி		312,415	194,767
ஒப்பந்த கூலிகள்		190,938	269,856
வாகன படி - தலைவர் மற்றும் பணிப்பாளர்கள்		50,000	50,000
தொலைபேசி படி - தலைவர் மற்றும் பணிப்பாளர்கள்		4,250	4,250
எரிபொருள் படி - தலைவர் மற்றும் பணிப்பாளர்கள்		16,150	16,150
ஊழியர் நலன்புரி சங்கம் - ஏக்கல		8,900	8,200
ஊழியர் நலன்புரி சங்கம் - இலங்கை போக்குவரத்து சபை		1,400	1,400
ஊழியர் நலன்புரி சங்கம் - லக்திவ		9,000	9,400
தண்டப்பண நிதியம்		61,171	104,071
சங்கம்		22,315	16,805
தொழிலாளர் கடன்கள் (வங்கி கடன்கள்)		560,570	385,734
கணக்காய்வு கட்டணங்கள்		24,243	69,990
தொலைபேசி		14,727	11,773
மின்சாரம்		91,884	115,885
பாதுகாப்பு		254,175	224,800
முத்திரை கட்டணம்		2,350	-
நிலுவை ஊழியர் சேமலாப நிதியம்		676,249	686,054
நிலுவை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்		91,956	93,293
திரும்பப் பெற்ற கேள்வி வைப்பு		5,000	40,000
இலங்கை போக்குவரத்து சபையின் தலைமை அலுவலகம்		21,411	16,711
		3,696,514	3,667,200

	குறிப்புக்கள்	2017 ரூபா	2016 ரூபா
11 வருமானம்			
பழுதுபார்த்தல் வருமானம்		90,728,459	73,340,474
		90,728,459	73,340,474
12 விற்பனை கிரயம்			
ஆண்டின் ஆரம்பத்தில் முடிவுறா வேலை		5,336,112	1,670,009
உற்பத்தி கிரயம்	12.1	84,432,762	68,235,701
ஆண்டின் இறுதியில் முடிவுறா வேலை		(12,368,791)	(5,336,112)
		77,400,083	64,569,598
12.1 உற்பத்தி கிரயம்			
நேரடி மூலப்பொருட்கள்		34,134,012	27,718,329
நேரடி உழைப்பு	12.1.1	32,342,498	26,907,434
ஊழியர் சேமலாப நிதியம்		2,919,784	2,495,424
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்		729,946	623,856
பேருந்து பழுதுபார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் (வெளியக மூலம்)		10,842,902	7,361,306
ஊக்குவிப்பு படி		3,092,952	3,129,352
பெறுமானத் தேய்வு – ஆதனம் & பொறி		370,668	-
		84,432,762	68,235,701
12.1.1 நேரடி உழைப்பு			
சம்பளம் மற்றும் கூலிகள்		22,986,715	16,549,506
நிலுவை சம்பளங்கள்		15,149	34,390
படி		-	2,330,000
வாழ்க்கைச் செலவு படி		5,709,600	4,836,000
மேலதிகநேரம்		578,988	312,474
ஒப்பந்த கூலிகள்		3,052,046	2,845,064
	12.1.1	32,342,498	26,907,434
13 ஏனைய வருமானம்			
திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட மானியம்		24,250,000	24,000,000
பயணிகள் போக்குவரத்து		745,533	420,549
வட்டி		423,238	-
கேள்விக் கட்டணங்கள்		3,000	5,000
நானாவிதம்		96,985	31,444
கழிவு விற்பனை		3,471,779	5,866
வழங்குநர் பதிவு வருமானம்		33,000	49,500
		29,023,535	24,512,359

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

	குறிப்புக் கள்	2017 ரூபா	2016 ரூபா
14 நிர்வாகச் செலவினங்கள்			
சம்பளம் மற்றும் கூலிகள்	14.1	9,537,016	8,732,923
பணிப்பாளர்களின் சம்பளம்	14.2	1,435,800	1,335,633
ஊழியர் சேமலாப நிதியம்		1,635,888	1,551,241
ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்		408,972	387,810
படி		262,360	1,538,587
பதிவழிக்கப்பட்ட செலுத்த வேண்டிய மீதி	14.3	-	(14,187,676)
பதிவழிக்கப்பட்ட பெறவேண்டிய மீதி	14.4	-	1,957,647
பணிக்கொடை		1,676,724	16,736,021
பணியாளர் நலன்புரி		80,438	142,804
மின்சாரம்		1,139,244	1,276,127
தொலைபேசி		166,643	118,728
வீத வரிகள்		85,080	85,080
வாகன காப்புறுதி		88,569	44,217
பாதுகாப்பு		5,478,675	3,954,200
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு		1,735,090	2,054,130
எரிபொருள்		1,231,629	815,961
காகிதாதி		251,198	263,138
மொழிபெயர்ப்பு கட்டணங்கள்		10,500	10,000
உடன்படிக்கை கட்டணங்கள்		49,830	12,141
தபால் கட்டணம்		7,334	4,128
கணக்காய்வுக் கட்டணங்கள்		117,000	100,000
செயலக கட்டணங்கள்		90,000	75,000
சட்ட கட்டணங்கள்		70,306	47,708
தண்டப்பணம் மற்றும் மிகைக் கட்டணம் - ETF		4,391	7,572
அன்பளிப்பு		2,000	5,000
சுகாதாரம்		183,927	128,711
நானாவிதம்		411,677	243,041
விளம்பரம் & பிரசித்தப்படுத்தல்		67,678	34,152
மிகையூதியக் கட்டணங்கள்		295,000	-
வருடாந்த பொதுக் கூட்ட செலவுகள்		23,065	-
கம்பனி பதிவுசெய்தல் கட்டணம்		57,500	-
பெறுமானத்தேய்வு		-	-
கணனி மற்றும் உபகரணங்கள்		100,934	-
மோட்டார் வாகனம்		24,846	-
தளபாடம் & அலுவலக உபகரணம்		151,801	-
காலக்கழிவு		26,000	-
		26,907,115	27,474,024

	குறிப்புக்கள்	2017 ரூபா	2016 ரூபா

14.1 சம்பளம் மற்றும் கூலிகள்

சம்பளம் மற்றும் கூலிகள்		6,374,687	5,974,911
சம்பள நிலுவைகள்		249,040	8,495
வாழ்க்கைச் செலவு படி		2,870,400	2,704,780
மேலதிகநேரம்		42,889	70,612
	14.1	9,537,016	8,732,923

14.2 பணிப்பாளர்களின் சம்பளங்கள்

எரிபொருள் படி		193,800	193,800
ஏனைய படி		1,080,000	1,073,000
தொலைபேசி கட்டணங்கள்		51,000	53,833
பணிப்பாளர்களது போக்குவரத்துச் செலவு		100,000	15,000
மருத்துவ கட்டணங்கள்		11,000	-
	14.2	1,435,800	1,335,633

14.3 பதிவழிக்கப்பட்ட செலுத்த வேண்டிய மீதி

செலுத்த வேண்டிய ஊ.சே.நி. நிலுவைகள்		-	859,411
செலுத்த வேண்டிய ஊ.ந.பொ.நி. நிலுவைகள்		-	181,350
நிலுவை சம்பங்கள் மற்றும் கூலிகள் - பணிபுரியும் ஊழியர்கள்		-	10,512,055
நிலுவை சம்பங்கள் மற்றும் கூலிகள் - ஓய்வுபெற்ற ஊழியர்கள்		-	1,958,737
பிடித்துவைத்தல் வரி		-	5,374
சிற்றுண்டிச்சாலை வைப்பு		-	10,000
திரும்பிய காசோலை		-	276,692
வியாபார கடன்கொடுத்தோர்		-	306,317
செலுத்த வேண்டிய மேலதிகநேரம்		-	77,740
		-	14,187,676

14.4 பதிவழிக்கப்பட்ட பெறவேண்டிய மீதி

ஓய்வுபெற்ற ஊழியர் சம்பள நிலுவைகளுக்கான முற்பணம்		-	254,000
பணிபுரியும் ஊழியர் சம்பள நிலுவைகளுக்கான முற்பணம்		-	1,693,000
நீதிமன்ற வைப்பு		-	4,000
எரிபொருள் இருப்பு		-	6,647
		-	1,957,647

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

	2017 ரூபா	2016 ரூபா
15 விநியோக கிரயங்கள்		
பயணம் மற்றும் போக்குவரத்து	85,056	72,127
வாகன வாடகை	607,000	600,000
	692,056	672,127
16 நிதி கிரயங்கள்		
வங்கி மேலதிகப்பற்று மீதான வட்டி	12,233	34,218
வங்கி கட்டணங்கள்	62,947	17,000
	75,180	51,218
17 வருமான வரிச் செலவினம்		
சாதாரண நடவடிக்கைகள் மீதான வரி	-	-

18 அறிக்கையிடல் காலப்பகுதி முடிவடைந்த பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் தேவைப்படும் நிகழ்ச்சிகள் எதுவும் ஏற்படவில்லை.

19 நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் மூலதன கடப்பாடுகள்

நிதி நிலைமைக் கூற்று திகதியில் உள்ளவாறு பொருண்மையான நிகழத்தக்க பொறுப்புக்கள் அல்லது மூலதன கடப்பாடுகள் எதுவும் காணப்படவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

CTP/A/LEC/FA/2017/07 2019 ஆகஸ்ட் 26

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்,
அனைத்து பங்குதாரர்களுக்கும்,

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவச் சபை பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். எவ்வாறான போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிரா-யத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் முடியாதிருந்தது.

1.3 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு அல்லது விபர-மான பட்டியல்கள் காணப்படாததன் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 8,290,423 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி கணிப்பீடு, சரியான தன்மை மற்றும் பூரணத் தன்மையை சரிபார்க்க முடியாதிருந்தது. மேலும், இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 16 இற்கு முரணாக ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் வெளிப்படுத்தல் தேவைப்பாட்டின் பிரகாரம் ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வை கம்பனி வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புக்களின் பௌதீக மெய்மையாய்வை கம்பனி மேற்கொண்டிருக்கவில்லை. ஆகையால், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 17,565,649 தொகையான இருப்பின் பெறுமதி கணிப்பீடு, சரியான தன்மை மற்றும் பூரணத்தன்மையை சரிபார்ப்பதற்கு முடியாதிருந்தது.

(இ) வருமான வரி, பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றிற்காக கம்பனி பதிவு செய்திருக்கவில்லை.

மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை

ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) எனது அபிப்பிராயம்:
மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதும், கம்பனியால் முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை என்பதும் எனது அபிப்பிராயம் ஆகும்.

பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல்

அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எச். எம். காமினி விஜேசிங்ஹ,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

MINISTRY OF TRANSPORT & CIVIL AVIATION
LAKDIVA ENGINEERING COMPANY (PVT) LTD.
NO. 73, MINUWANGODA ROAD, EKALA, JA-ELA, SRI LANKA

எனது இலக்கம் - LEC/AC/AQU-07/2017

2019/08/29

கணக்காய்வு அத்தியட்சகர்,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்ல

திருவாளர் அவர்களுக்கு,

லக்திவ இன்ஜினியரிங் (தனியார்) கம்பனியின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் 2019/08/26 ஆந் திகதிய CTPA/LEC/FA/2017/07 ஆம் இலக்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பானது.
நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு – 2017

1)

1.4) அ)(i) ஏற்றுக்கொள்கின்றேன். 2017-01-01 ஆந் திகதியில் உள்ளபடியான ஐந்தொகையிலுள்ள ரூபா 8,290,423 நிலையான சொத்துக்களின் மீதி தொடர்பில் சரியானதொரு அறிக்கை முறையாக தய-ாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அதன் காரணமாக அந் ஆரம்ப மீதிக்காக பெறுமானத் தேய்விட முடியாதிருந்தது. எனினும், 2017-01-01 ஆந் திகதி இடம்பெற்ற 2016 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,885,012 தொகையான சொத்துக்களுக்காக ஒதுக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு -1)

(ii) LKAS 16 இற்கு இணங்க பயன்படு ஆணுட்காலம் அல்லது பயன்புடுத்திய சதவீதத்தினை கணக்குகளுடன் வெளிப்படுத்த இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.(பின்னிணைப்பு – 11)

(ஆ) ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் உரிய நடைமுறைக்கமைய செயற்படுகின்றேன்.

(இ) ஏற்றுக்கொள்கின்றேன். 2019 யூலை மாதம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2) நிதிக்கூற்றுக்கள்

2.1.1) 2016 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் வங்கி சரியாக வட்டியை கணக்கு வைத்திராததுடன், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக சரியாக நிலையான வைப்பானது ரூபா 2,000,999 தொகை நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டது. (பின்னிணைப்பு – 111)

2016-12-31 ஆந் திகதிய நிதிக்கூற்றுக்களில் பிரகாரம் = 2,885,199
2016-12-31 ஆந் திகதிய நிதிக்கூற்றுக்களனி பிரகாரம் மீதி = 3,021,014
சீராக்கம் செய்யப்படாத நிலையான வைப்புத் தொகை = 135,815

2.2) ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் பணிப்பாயர் சபையின் கூட்டத்தில் சமர்ப்பித்து அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்கின்றேன்.

2.3) அ-உ) ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க செயற்படுகின்றேன்.

3) 3.1) ஏற்றுக்கொள்கின்றேன்.

4) 4.1) i-iv) ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் செயற்பாடுகளை சரியாக முன்னெடுக்கின்றேன்.

4.2) அ) ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் செயற்பாடுகளை சரியாக முன்னெடுக்கின்றேன்.

ஆ) ஏற்றுக்கொள்கின்றேன். பற்றுச்சீட்டுகளை தயாரிக்கும் போது நடைமுறை பணிகளின் இருப்பில் சீராக்கம் மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் மொத்த இலாப வீதம் மாற்றமடையக்கூடும்.

இ-ஈ) ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் செயற்பாடுகளை சரியாக முன்னெடுக்கின்றேன்.

4.3) அ) தொடக்கச் சந்தர்ப்பத்தில் கெமரா செயற்பாட்டில் இருந்ததுடன், இந்த கொள்வனவு சரியான பெறுகை நடைமுறைக்கமைய மேற்கொள்ளப்பட்டிராததுடன், அந்த கெமராக்கள் நிறுவனத்தில் காணப்பட்டதுடன், அவை உரிய அமைச்சின் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு சுட்டிக் காண்பிக்கப்பட்டதுடன், கெமராக்கள் தற்போது செயற்படு நிலையில் இல்லை.

ஆ) நிறுவத்திற்கு காணியின் சட்ட ரீதியான உரித்து சாட்ட ரீதியான உரித்து சாட்டப்பட்டிராத காரணத்தால் இந்த பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள முடியாதிருந்தது.

இ) ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் செயற்பாடுகளை சரியாக முன்னெடுக்கின்றேன்.

ஈ) ஏற்றுக்கொள்கின்றேன். கடந்த சில வருடங்களாக நிறுவனம் பெறும் நிதி நெருக்கடிக்கு மத்தியில் நடாத்திச் செல்லப்பட்டதுடன், அதன் பிரகாரம் பெருளாதார நலன்களை பெற்றுக்கொள்ளும் வகையில் இருப்பினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன், அத்தியாவசியமான போது இருப்பு கொள்வனவு இடம்பெற்றது.

உ) ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் செயற்பாடுகளை சரியாக முன்னெடுக்கின்றேன்.

4.4) ஏற்றுக்கொள்கின்றேன். அமைச்சிற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

4.5) அ) ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் செயற்பாடுகளை சரியாக முன்னெடுக்கின்றேன்.

ஆ) ஏற்றுக்கொள்கின்றேன். ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அதனை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

இ-ஈ) ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காத்தில் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் சமர்ப்பித்து அங்கீகாரலம் பெற்றுக்கொள்கின்றேன்.

…………………………………..

பொறியியலாளர் ஏ.ரீ.எதிரிசூரிய,
தலைவர்
லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின்

பிரதிகள் - செயலாளர், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு